# நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சு

## குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

**2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் சட்டத்தை அமுல்படுத்த தாபிக்கப்பட்டுள்ள குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் ஆளணியில் உள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்துள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.**

**01. மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம் / சிங்களம்) MA 4**

**தகைமைகளும் அனுபவமும்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆங்கிலப் பாடம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்கள மொழிப் பாடத்தில் திறமைச்சித்தியை பெற்றிருத்தல்.

அத்துடன்

ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கும் மற்றும் சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்ப்பதில் ஆகக்குறைந்தது ஒரு (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MA 4: ரூ.37,970-10x755-15x930-5x1135-65,145

**வயதெல்லை:**

22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 45 மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**02. தகவல் உத்தியோகத்தர் MA 4**

**தகைமைகளும் அனுபவமும்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:**

(அ) பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பப் பாடம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு:**

1. இந்தப் பதவிக்கு உரிய மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ சேவை உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத (MA 01) சேவை வகுதியில் உரிய துறையில் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது எட்டு (08) வருட திருப்தியான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MA 4: ரூ.37,970-10x755-15x930-5x1135-65,145

**வயதெல்லை:**

22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இந்த உச்ச வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

**03. முகாமைத்துவ உதவியாளர் MA 1-1 (பதவிகள் 02)**

**தகைமைகளும் அனுபவமும்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:**

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்
III. ஆங்கிலம்

ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் (பொதுப் பரீட்சைப் பாடம் தவிர) சித்தியடைந்திருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு:**

(அ) ஆரம்பநிலைத் தரம் - திறன்சாராத, அரைத்திறன் மற்றும் திறன் சேவை வகுதிகளில் "ஆ", "இ" மற்றும் "உ" ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் மாத்திரம் இந்த பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்
III. ஆங்கிலம்

ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

தொழில் மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கணனி சொற்கள் செயல்முறைப்படுத்தல் (Word Processing) / தட்டெழுத்து பற்றிய ஒரு பாடநெறியை பின்பற்றி பூர்த்தி செய்திருத்தல்.

(இ) சேவையில் நிரந்த நியமனங்களை வகிக்க வேண்டும். அந்த நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டு இருத்தல்.

(ஈ) உரிய தினத்திற்கு முன்னர் ஒரு நிரந்தரப் பதவியில் 05 வருட தொடர்ச்சியான திருப்தியான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MA 1-1 - ரூ. 27,910-10x300-7x350-4x495-20x660- ரூ.48,540

**வயதெல்லை:**

18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இந்த உச்ச வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

**நியதிகளும் நிபந்தனைகளும்:**

**01. கட்டமைந்த நேர்முகப் பரீட்சை**

நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். தகைமைகளை பெற்றவர்கள் மத்தியில் ஆகக்குறைந்தது வெற்றிடங்களின் எண்ணிக்கை போல் இரண்டு மடங்கு எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அதிக புள்ளிகளை பெற்றவர்களுக்கு மத்தியில் திறன் ஒழுங்கில் தேர்ந்தெடுப்பு மேற்கொள்ளப்படும்.

கட்டமைந்த நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| உரிய அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக கல்வி / தொழில் தகைமைகள் | - | 30 புள்ளிகள் |
| ஏனைய உரிய செயலாற்றுகை மற்றும் திறன்கள் | - | 15 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| நேர்முகப் பரீட்சையில் ஆற்றிய செயலாற்றுகை | - | 25 புள்ளிகள் |
| **மொத்தப் புள்ளிகள்** | - | **100 புள்ளிகள்** |

**02.** ஒவ்வொரு விண்ணப்பதாரரும்

I. இலங்கைப் பிரஜையாக இருத்தலும்
II. பதவிக்கு சாட்டப்படும் பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் மற்றும் தீவில் எந்தப் பாகத்திலேனும் பணியாற்றுவதற்கும் தேவையான உடலியல் உளவியல் தகைமைகளைக் கொண்டிருத்தலும்
III. சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும்
இருத்தல் வேண்டும்.

**03.** ஏற்கனவே அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் தத்தமது திணைக்கள தலைவர்களின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுவிக்கப் படலாம் என்பதற்கு திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**04.** விளம்பரத்திற்கு இணங்க, அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**05.** பதவிக்குரிய மேற்குறித்த தகைமைகளையும் அனுபவத்தையும் சான்றுபடுத்துகின்ற சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகள் விண்ணப்பங்களுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**06.** விண்ணப்பதாரர்கள் தகாத முறையில் செல்வாக்கு செலுத்துவது அல்லது விசாரிப்பது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கான ஒரு காரணமாகும்.

**07.** விண்ணப்பங்கள் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு கிடையாத சகல விண்ணப்பங்களும், குறித்த சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகள் இல்லாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**08.** 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்திற்கு நீங்கள் பங்களிப்பு செய்ய வேண்டும். உங்களின் பங்களிப்புத் தொகை சம்பளத்தில் 08% வீதமாகும். அதிகார சபை உங்களது சம்பளத்தில் 12% வீதத்திற்கு சமனான ஒரு தொகையை பங்களிப்பு செய்யும்.

**09.** ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உங்களது சம்பளத்தில் அதிகார சபை 3% வீதத்திற்கு சமனான ஒரு தொகையை பங்களிப்பு செய்யும்.

விண்ணப்பங்கள் கல்வித் தகைமை, தொழில்சார் தகைமை, அனுபவ சான்றிதழ்கள் அடங்கலாக எல்லா விபரங்களும் அடங்கிய ஒரு சுய விபர அறிக்கையுடன் இணைத்து "**பணிப்பாளர் நாயகம், குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை, இலக்கம் 428/11 ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல**" எனும் முகவரிக்கு 2024.05.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை, இலக்கம் 428/11 ஏ, முதலாவது மாடி, மென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**தொ.பே.இல. 0112879539**
**திகதி: 2024.05.09**